# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2366/14 - 2024 ජනවාරි මස 09 වැනි අඟහරුවාදා - 2024.01.09

*2366/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.-பி. 3/2021* (III)

***2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்***

53 ஆம் பிரிவின்கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 53 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் விதப்புரைகளைக் கருத்திற்கொண்டும் அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மேலும்-

(அ) அமைச்சரவை, 2024, சனவரி 1 ஆந் திகதிய 23/2531/631/034 ஆம் இலக்க அதன் முடிபின் மூலம் இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் வியாபாரத்தை செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாகக் குறித்தலை அங்கீகரித்துள்ளது எனவும்;

(ஆ) செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாக அத்தகைய வியாபாரத்தை கருதுகின்றமைக்கான நியாயமான தன்மை இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவுள்ளது எனவும்;

(இ) சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை III இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும் எனவும்; அத்துடன்

(ஈ) குறித்துரைக்கப்பட்ட சட்டவாக்கங்களின்கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் இதற்கான அட்டவணை IV இல்குறித்துரைக்கப்பட்ட திகதிகளில் தொடங்குதலும் நடைமுறையில் இல்லாதொழிதலும் வேண்டும் எனவும்,

இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.

**ரணில் விக்கிரமசிங்க,**
முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்.

கொழும்பு,
*2024*, சனவரி *08*.

**அட்டவணை I**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாக குறிக்கப்பட்ட வியாபாரம் பற்றிய விபரங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அதிகாரமளிக்கப்பட்ட ஆளின் பெயர் | டிக்ரி சொப்ட்வெயார் பிறைவேட் லிமிட்டெட் |
| 2. | உரிம இல. | 2309060016 |
| 3. | கரைகடந்த கம்பெனி பதிவில. | பீசீசீ 00284609 |
| 4. | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரத்தின் வகுப்பாக்கம் | செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம்நிலை வியாபாரம் |
| 5. | விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளுக்கான உரித்துடைமை | டிக்ரி சொப்ட்வெயார் பிறைவேட் லிமிட்டெட் ஆனது செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாம் நிலை வியாபாரம் ஒன்றாக மட்டுமே குறிக்கப்படுகின்றதுடன் செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த முதனிலை வியாபாரம் ஒன்றாக குறிக்கப்படுவதற்கு தகவுடையதாகவில்லை |
| 6. | தகவுடைமைக் கட்டளைகள் | 2023, ஓகத்து, 4 ஆந்திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன்மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 4 (2) (ஈ) மற்றும் 4 (3) (ஆ) என்னும் ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்கள் |
| 7. | ஏற்புடையற்பாலதான விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்புத் திட்டம் | 2023 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகர (செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரங்களுக்கு விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்கள் வழங்குவதன்மீதான வழிகாட்டுநெறிகள்) பற்றிய ஒழுங்குவிதிகளின் 5 ஆம் ஒழுங்கு விதியில் குறித்துரைக்கப்பட்ட திட்டம் |

**அட்டவணை II**

**செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமாக கருதுவதற்கான நியாயமான தன்மை**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவில் விதிக்கப்பட்டவாறு, கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் குறிக்கோள்கள், சொல்லப்பட்ட சட்டத்தின் 53 (5) ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு தேசிய நலனை அல்லது தேசிய பொருளாதாரத்தின் முன்னேற்ற நலனைக் கருத்திற்கொண்டு, கொழும்புத் துறைமுகநகரத்தை தாபிக்கின்றமையின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கென, செயல்நுணுக்க முக்கியத்துவம் வாய்ந்த வியாபாரமொன்றாக வியாபாரத்தை குறிப்பதில் கருத்திற்கொள்ளப்பட்டுள்ளன.

2011 இல் கூட்டிணைக்கப்பட்ட சிங்கப்பூர் டிக்ரி கோப்பரேஷன் பிறைவேட் லிமிட்டெட் இன் முழுமையாக சொந்தமாக வைத்திருக்கப்படும் துணைநிலைக் கம்பெனியொன்றாகவுள்ள டிக்ரி சொப்ட்வெயார் பிறைவேட் லிமிட்டெட் ஆனது, தகவற் தொழில்நுட்பவியல் வியாபாரத்தில் உள்ளது. டிக்ரி சொப்ட்வெயார் பிறைவேட் லிமிட்டெட் ஆனது, 100,000 ஐஅடொ ஆரம்ப வெளிநாட்டு நேரடி முதலீடொன்றுடன் வியாபாரத் தொழிற்பாடுகள் தொடங்கியதிலிருந்து மூன்று ஆண்டுகளினுள் கொழும்பு துறைமுக நகர அதிகார இடப்பரப்பினுள் தொழிலுக்கமர்த்தப்பட்ட இருநூறு குறைந்தபட்ச ஆளணியினரைக் கொண்டிருக்கும்.

டிக்ரி சொப்ட்வெயார் பிறைவேட் லிமிட்டெட் ஆனது, செயற்கை நுண்ணறிவில் உள்ள மிக்க அண்மையிலான தொழில்நுட்பங்களினூடாக முகில் கட்டமைப்புக்கள், கையடக்கத் தொலைபேசிச் செயலி அபிவிருத்தி, ஆதாரச் சேவைகளை வடிவமைத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் ஒழுங்கமைப்புகளினுள் சுய சேவை வியாபார நுண்ணறிவை இயலச்செய்வதற்கான செயல்நுணுக்கங்களை நடைமுறைப்படுத்துவதிலும் விசேடித்து விளங்குகின்றது.

டிக்ரி சொப்ட்வெயார் பிறைவேட் லிமிட்டெட் ஆனது, ஐக்கிய அமெரிக்க நாடுகள், நோர்வே, அயர்லாந்து, சவூதி அரேபியா மற்றும் அவுஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகளில் உள்ள பல்லெண்ணிக்கையிலான வாடிக்கையாளர்களுக்கு தேவைப்பாட்டுப் பகுப்பாய்வு, குறியிடுதல், பரீட்சித்தல் மற்றும் ஆயுட்கால பேணுகை நிகழ்ச்சித்திட்டங்கள், அளவிடத்தகு மற்றும் பதிலளிக்கக்கூடிய இணையச் செயலிகள் உட்பட வியாபாரத்துக்கு முக்கியமான தீர்வுகளுக்கான முனைக்கு முனையான மென்பொருள் மேம்பாட்டுச் சேவைகளை வழங்கும்.

**அட்டவணை III**

**சட்டவாக்கங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள்**

| சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள் | வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகள் |
|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | (அ) பகிர்ந்தளிக்கப்பட்ட எல்லா வருமானங்களும், இலாபங்களும் மற்றும் பங்கிலாபங்களும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக் கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும்;<br>(ஆ) செலுத்தப்பட்ட எல்லாக் கொடுப்பனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட பிடித்துவைத்தல் வரியிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்; |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் உள்நாட்டு கொள்வனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட வரிகளிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் உள்நாட்டு கொள்வனவுகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக் கப்படுதல் வேண்டும். |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமானநிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவாறு எல்லா வியாபாரம் தொடர்பான பண்டங்களின் இறக்குமதிகளும் இச்சட்டத்தின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வரிகளிலிருந்தும், தீர்வைகளிலிருந்தும் மற்றும் அறவீடுகளிலிருந்தும் விலக்களிக்கப்படுதல் வேண்டும். |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவ தில்லை. |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2022, யூன் 3 ஆந் திகதிய 2282/59 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (கொழும்பு துறைமுக நகரில் முதலீடுகள்) ஒழுங்குவிதிகள் தவிர்ந்த இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளிலிருந்துமான விலக்களிப்பு. |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | இச்சட்டத்தின்கீழ் விலக்களிப்பு அல்லது ஊக்குவிப்பு எதுவும் வழங்கப்படுவதில்லை. |

**அட்டவணை IV**

**வழங்கப்பட்ட விலக்களிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புகளின் செல்லுபடியாகும்காலப்பகுதி**

| சட்டத்தின் அட்டவணை II இன்கீழ் நிரற்படுத்தப்பட்ட சட்டவாக்கங்கள் | தொடங்கும் தேதி | முடிவுறும் தேதி |
|---|---|---|
| 1. 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2059, சனவரி 31 |
| 2. 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 3. 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 4. 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, நிதிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 5. 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித்தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 6. (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 7. 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுக மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 8. 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 9. 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தய, சூதாட்ட விதிப்பனவுச் சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 10. 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 11. (267 ஆம் அத்தியாயமான) களியாட்ட வரிக் கட்டளைச்சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |
| 12. 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் | 2024, பெப்புருவரி 1 | 2049, சனவரி 31 |
| 13. 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் | ஏற்புடையதல்ல | ஏற்புடையதல்ல |

EOG 01-0079

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.